உ

ஸ்ரீராமஜெயம்,

ஸ்ரீமகாபாரதத்தில் ஸ்ரீகிருஷ்ணன் தூதில்.

நல்லறவான் களப்பெலி யாகமம்.

(2) இரண்டாம் பாகம்.

திருச்சினாப்பள்ளி தென்னூர் நாடக வுபாத்தியாயர்,

பிரம்மநாயகம் பிள்ளையவர்களால்,

இயற்றப்பட்டது.

சென்னை கொமளீஸ்வரன் கோவில்

ஜகத்பிரகாச அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

1907.

இதன் விலை] ரிஜிஸ்டர் காபிரைட். [பை 6.

ரிஜிஸ்டர் காப்பிரைட்டின் அறிவிப்பு.

இதனால் சகலமான கனவான்களுக்கு தெரியப்படுத்துவது யாதெனில் ஸ்ரீ கிருஷ்ண தூதில் நல்லவவான் களப்பெலி யாகமம் 1-2-3 பாகம் புஸ்தகத்தை மகா கனம்பொருந்திய கெவர்ண்மெண்ட் அவர்களது 1907 வருஷத்திய 25 வது செக்ஷன் 8 வது ரூல்சின்பிரகாரம் செய்யப்பட்டிருக்கிற படியால் இந்நூலை எவர்களும் அச்சிடக்கூடாது.

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீகிருஷ்ணன் துணையில்,

நல்லறவர்ன் களப்பெலி யாகமம்,

வெண்பா சங்கருபரணம்.

சீர்பெருகும்மணிநகறபட்டணத்தில் தான்வசிக்கும் செல்வியான
பார்புகழும் நாககன்னிபயின்ற திருநல்லறவான் பாடல்தன்னை
வீறுடனே சாற்றுதற்கு—விமலப் பறனுமை பெற்றிடும் விகடக்
கரிமுகனேநிந்—மலப்பதமிக வைத்து நீ கார்.

துரோபதை விருத்தம். (இ-ப்-முகாரி.)
வெம்பியே மனது புண்ணாய் [illegible]களால் நீர்கள் சோற
தும்பிபோல் கரியகூந்தல் துரோபதை விரித்துக்கொண்டு
தம்பியைகாணே மென்று தரைதனில் ;வீழ்துமாது
நம்பிநேனுன்னை யய்யோ நமன் பதிக்கேகின்றாயோ

புலம்பல் தரு (பல்லவி).

யென் செய்வேன் மகனேஞன் — யென் செய்வேன் மகனே
யென் [illegible]ணமணி அறவான் — யென் செய்வேன் மகனே

அனுபல்லவி.

பொன் செய்யும் மணி — மார்பா
புவிபுகழும் — பிர்தாபா
மின் செய்யு — அதிரூபா
விளங்கும் சற்குண — தீபா (யென் செ)

சரணம்.

தீயன் திரியோதிரன் — செய்த தீவினையிது
மாயன் மிகுந்த சூது — மனதில் கபடமாகி
தாயகமாயுறைத்து — தந்தை ஐவர்களுக்கு
வுபாயமாய் காளி தேவிக்குன்னை — பெலியிட்டாரே (யென் செ)
அன்னை தந்தையர் சுற்ற — அவர்கள் மனமகிழ்ந்து
பின்னையுலகிலுள்ளோர் — பிரிய முடன் புகழ
வுன்னைமகுடம்சூட்டவுளமகிழ்ந்திருந்தேண்டா
யென்னமாய் பிரியவும் இசைந்தாயோடா — மகனே (யென் செ)

துரோபதை புலம்பல்.

அய்யோ யெந்தன் மகனேவுன்னை — யருத்து பெலியிடவும்
ஆருமோ மனம் தேருமோ யெந்தன் — அங்கமுரிகிடுதே
பையாடரவணிந்த சிவன் — பாதமதைபணிந்து
பரிவாய்த்தவம் — செய்தாவுன்னை
பயின்றேன் யிந்த — விதிக்கோ
கண்ணேகண்ணின் மணியே — சுவை
கனியே கட்டிக்கரும்பே — இந்த
கண்காக்ஷிக்கோபயின்றேன் — பழி
காராய் — யென்ன செய்வேன்
பிள்ளையற்ற பாவி யென்று — பேறுலகோரேச (யுன்னை)
பெருங்காளியிக் கிரை கொடுக்க — பிர்ம்மன்லபித்தானோ
பெற்ற சுதன்யிருந்து இந்த — பேறுலகாளாமல்
பேதைமனம் தளர்ந்திடவும் — பிரமன்லபித்தானோ

நாககன்னி விருத்தம்.

ஆகமனூல்தெரியுடனேசமர்களத்தில் பெலிகொடுக்க அரிந்து தூதர்
மாகமுயர்மணி நகர்போய்மங்கைநல்லாள்தமகுரைக்கமனதுநொந்து
வேகமுடன் நடந்தோடி மின்னனையாள்புடைசூழ விஜயன்மறவி
நாககன்னிதன் புதல்வன் நல்லறவான்தனைதேடி நண்ணினளே

தரு புலம்பல் கன்னிகள் (முகாரி)

தையாறு மாதம் தவசும் இருந்தேனடா	மகனே மகனே
(இந்த) தாரணிதன்னில் விரைதனம் செய்தாரோ	மகனே மகனே
வேந்தன் தனஞ்செயன் விரைதமை செய்தாரோ	மகனே மகனே
(அந்த) வேதமுனி யுபதேசமும் செய்தாரோ.	மகனே மகனே
மழைமாசிபோலே யென்வயற்றில் தரித்தாயே	மகனே மகனே
(நீ) மகரகுண்டலத்துடன் கூடப்பிறந்தாயே	மகனே மகனே
கொடிமாசிபோலேயென் குடலில்தரித்தாயே	மகனே மகனே
(வுன்னை) குள்ளவரிக்கி குலிக்கிவளர்த்தேனடா	மகனே மகனே
ஐந்தலை நாகம் அரவம்வளர்த்திதே	மகனே மகனே
வுன் அன்னை நாககன்னிதன்னை மறந்தாயோ	மகனே மகனே
காமன்கை வில்லோ வுன்கண்ணுப்புருவமும்	மகனே மகனே
(அந்த)கார்கடல்குள்ளே கதிரோன்வுதித்தாப்போல்	மகனே மக
இட்டதிருமணியும் இலங்கும் திருவுருவும்	மகனே மகனே (என்)
யெடாளன்தன்முகம்யென்றைக்குகாண்பேண்டா	மகனே மகனே
காலிக்குவுன்னைகருத்தாய் வளர்த்தேனடா	மகனே மகனே
(யென்னை) கண்டார்சிரிக்கவும் கள்ளிதுணிந்தேனடா	மகனே

நாககன்னி விருத்தம்.

செப்பாறும் புவிமீதில் யெல்லோரும் சேய்களுடன் சேர்ந்து வாழ
மெய்ப்பாறும் பஞ்சவர்க்கு ஓர்குழந்தை யாகிவந்துமேன்மையாக
ப்பாறும் மணிநகரம்பட்டணத்தை முடிசூட்டியுலகாளாமல்
ப்பாரில் வுயிர்காளிதேவியர்க்குப்பிலரையாகவெழுதினுனே

நாககன்னி புலம்பல் தரு பல்லவி.

அப்பனே மகனே கணமணியே வுந்தன் ஆவி
பெற்றபாவி யுன்னையருத்துப் பெலிகொடுக்க அப்பனே

அனுபல்லவி.

ஒப்பாறும் யில்லையென்றிருந்தேன் இதற்காக
மனம்நோக நீ பிரிந்து வளர்த்திட்டாயோ
ஒப்பாறும் யில்லை யென்றிருந்தேன் அடா
செப்பரிதாகிய சேனை மன்னவர் சூழ
யிப்படிக் கொலுவினில்இருப்பா யென்றிருந்தேனடா அப்ப

ச[illegible]ணம்.

பட்டத்து துரைமக்கள் கூடி விளையாடி மலர்சூடி யென்னை
தேடி வருவாயிந்த இட்டத்தை யெங்கே மறந்தாயோ
யெந்தன் சேயே வுந்தன் வாயால்
ஒரு சேதி சொல்லத்தகாதோ
இட்டத்தை யெங்கே மறந்தாயோ
பட்டவர்த்தனருடன் மகுட வர்த்தனர் கூடி
பட்டந்தரிக்கு முன்னே படுகளம் சேர்ந்தாயோ அப்பனே
பதினெட்டுசனைடை நாளெல்லாம் ஒரு நொடிக்குள்
பகல் முடிக்க சூரிபார்த்திருந்தா யென்று
சதிசெய்ய நினைந்தாரோ மாயன்
விதிவசம் ஒருவராலும் வெல்லுவதரிதென்று
மூதுமறை சொல்லியமொழியோமொழியோபாலா (அப்பனே)

வஞ்சகமான திரியோதன் வுன்னைக்கண்டு மனம்விண்டு
மதிமயங்கித்திரிவார்களே வஞ்சகமான திரியோதன்.
பஞ்சவர் குலத்தினில் பாலனாய் வந்துதித்தாய்
கொஞ்சவயதிலெந்தன் குழந்தை நீ மடியவும் (அப்பனே)

நாக கன்னி விருத்தம் (இ-ம்-முகாரி)

பேரிகை முரசு மேளம் பிரபலயமாய் முழங்க
தாரையும் தவண்டம் சின்னம் தவில் மேளங்களு முழங்க
கூரையும் கோடி வஸ்திரம் குணமுடன் வுடுத்திகளும்
வீரமா காளியர்க்கு மெய்ப் பெலியானாயோடா

புலம்பல் தரு பல்லவி நாதாநாமகிரி.

யென் செய்வேன் பாலகனே
அய்யோமன தேங்குதே பாலகனே
(இந்த) கண்கொள்ளாபடை சூழ காளியற் சன்னதியில்
கண்ணே நீ மாண்டாயோடா என்செய்வேன் பாலகனே

அநுபல்லவி.

வல்லவனே அரவான் வுன்னை காண
மகாபாவி பட்ட துன்பம் இந்த யெல்லையை யளந்த
யெம்பெருமாள் யெங்கள் அண்ணர் ஆரியடொம்பனார்
என செய்வேன் பாலகனே

சரணம்.

யென்னை டொம்பப் பெண்வடிவாக்கி கூட்டிக்கொண்டு
சென்றார் அத்திபுரமும் நான்
தொண்ணூத்தாறடிகளை மீதேரி நின்று அதில்
தொழிலனேகங்கள் செய்தேன்
நான் செய்தொழிலுகா சித்து வுங்களப்யா தேர்விஜயனும்மகிழ்ந்து
என்னை-வந்து மருகிடவேணுமென்றுங்களைய்யர்
வணங்கினார் டொம்பரையும்
யென்மேல்மய்யல் பெருகிவந்து அர்ச்சுனரென்னை
மலர்ச்சோலை தனில் சேர்ந்தார் அன்று
வந்து யென்கெர்ப்பம்தனிலுதித்து நீயும் வந்துபிறந்தாயோடா
வுன்னை பெற்றவயற்றிலே தான் நல்லறவான் நீ
பெறு கெறுப்பிட்டாப்போல் (நீ) கற்ற வித்தையெல்லாம்
காளிக்கி தத்தம்பண்ணி கண்ணே நீ மாண்டாயோடா

சுபத்திரை விருத்தம். (இ-ம்-முகாரி.)

சுந்திரமாயன்றங்கை சுபத்திரையாளும் கேட்டு
சிந்தையும் நொந்துவாடி தி... ய மகனைப்பார்த்து
விந்தைய தாகவுன்னை வி...யம தன்னில் நாங்கள்
மைந்தனை பெலிகொடுக்க மண்மீதில்யிருப்பேனேடா

புலம்பல் தரு கண்ணிகள்

என்னநான் செய்குவேன் யென்மகனேயறவான்
...யோ குருக்ஷேத்திரத்தில் ஆஆஆ
எல்லோரும் காண நீ வந்துபடுத்திட
எவர் செய்த மாயமிதோ ஆஆஆ

ன மன்னவர்சூழ மாணிக்க முடிசூட்டி வையகம்ஆளாமல்ஆஆ
ாபெலியிடவந்ததோ தலைவிதிமகனே நான்யென்னசெய்வேன்
னம் சிருவயதில் செல்வமாய்வளர்ந்து நீ செங்கோல் செலுத்தா
—செங்கோல்முறைதப்பி தெருவில்மடிந்திட
வாநான் யென்ன செய்வேன்
றுதனைச்சுமந்து வெண்ணைத்தனைத்திருடும் கோவிந்தன்
செயலோ வண்ணமாகிய காளிதுர்க்கைக்கு பெலி யிட்டு
னை நான்பார்ப்பேனேடா.

தாலாட்டு.

ஆராரோ ஆரிரோ ஆராரோ ஆரிரோ.

காசிதனில் மூழ்கி கடவுளரை தோத்தரித்து
யாசபதம் பெற்றுவந்த பார்த்திபன் தன்மகனே ஆரா
மூத்திக்கி வித்தே முழுமதியே பூரணமே
சத்திசிவன்பெற்ற தனஞ்சயன் பாலகனே ஆரா
அறவத் துவசனை அரனம்பினலேதான்
களவுசெய்வேன் யென்றுசொன்ன கட்டழகன் தன்மகனே ஆரா
சங்குனல் பால்குடுத்தால் சமர்த்தில்லை யென்று சொல்லி
பாங்குமூனை மீநிவிட்டு வளர்த்தேண்டா கண்மணியே ஆரா
தரையிலே விட்டாக்கால் தண்டைக்கால்னேகுமென்று
மார்பிலே யேணைகட்டி வளர்த்தேண்டா கண்மணியே ஆரா
பெற்றபெருமாளே பெண்கள்சுடாமணியே
யுத்ததொழுவாக்கியத்துக் குகந்தபெருமாளே ஆரா
யுத்தகளம்தன்னிலே ஓரம்பினலே தான் வதைக்கிரேனென்று
சொன்ன வாய்மொழிகள் மறந்தாயோ ஆரா
மாயவனர் யெங்களண்ணன் வுன்மாமன் செய்தசூததினல்
வுபாயமாய்காளியற்கு வுனைப்பெலியுமிட்டாரோ ஆரா

சகாதேவன் தேவாரம்.

சிவசிவா யென்ன செய்வேன், சிந்தையும் மதிமயங்கி,
அவமதி யாலே யெந்தன் அறவானை பெலிகொடுத்து,
தவமது செய்து பெற்ற தைய்யலாள் நாககன்னி,
யெவ்விதம் வுனைப் பிரிந்துயிருப்பேனே மகனே யென்றான்.

புலம்பல் தரு கன்னிகள்.

இதுயென்ன காரணமோ தம்பி யுனக்கிந்த விதிவருமோ (இப்போ)
சதிசெய்துனைமடிக்க நாங்களுந்தான் சண்டாளருனேமடா
வுன்படியெனக்கு பாரதத்தில் வுதவியாய் நீ யிருந்து-(அந்த)
வள்ளல் கிருபையாலே வுங்களுக்கு மாணிக்க முடிதரித்து—
கண்ணினல் பார்க்கவேணும் யென்றுயெண்ணி கானகம் விட்டு
வந்தோ(மிப்போ) காளிபர்க்குபெலியாய்வுன்னை தந்து கண்ணினல்
பார்க்கலாச்சே—பதிகெட்டு நாள் சண்டையை ஓர் சாமத்தில்

பஞ்சுபோல்செய்வேனென் றாய் இந்த பகைவர்கள்
கணனின் முன்னே காளியற்கு படுகளம் சேர்த்தாயோடா
தங்கத்திருமேனிவடி வுள்ள தனஞ்செயன் பாலகனே யெந்தன்
அங்கமுருகுதடா பாலகா வுன் ஆண்மை தன்னையினைத்தால்
தன்னையறியாமல் வந்துவிட்ட சம்பனையோ அரியேன்
வல்லவனே வுன்கைவாளினாலே யாளவிதிவசமோ யேன்

நகுலன் தேவாரம்.

சங்கரா யென்ன செய்வேன் யென் தந்தயன்றன் அறவான் தன்னை
பொங்கமாய் காளியற்கு யென்புனிதனை பெலிகொடுத்து
அந்த யாயிருக்கவுந்தான் யென் அங்கமும் யொருக்குமோ தான்
மைந்தனோ டென்னுயிரை மாய்க்குறேன் யென்றுசொன்னார்

புலம்பல் தரு.

ஐய்யோநான் யென்ன செய்வேன் ஆதிமூலப்பொருளே
அரும்பாவியானேனய்யோ சிவனே பறமசிவனே
செய்யும் தவத்தில் வந்த சேயனை நானிழந்து
சிந்தை கலங்கலா[illegible]சிவனே பறமசிவனே
மைந்த[illegible]பா தனைத யெண்ணி நொந்தோன்மனதிலுன்னி
வளர்த்தேன் வீரமாகாளியற்கு சிவனே பறமசிவனே
ஆரும் செய்யாத வினை அரும்பாவி செய்தேனைய்யோ
திருமைகண்மணியை யிப்போ சிவனே பறமசிவனே
வேறுவகை யரியேன் விமலா யென்பாலன் தன்னை
வீறமா காளியற்கு சிவனே பறமசிவனே
வெட்டி பெலிகொடுத்து வீறமா காளியற்கு
மேதினி யாள்வேனோ சிவனே பறமசிவனே
பாரிலெந்தனைப்போல பாலனை பெலிகொடுத்து
பலனில்லா பாவிபுண்டோ சிவனே பறமசிவனே
பிள்ளையில்லாத ஜென்மம் யோயென்ன யிருந்தென்ன
பிரயோஜனங்களுண்டோ சிவனே பறமசிவனே
வள்ளலே யென்னுடைய மனதெப்படி யாறுவேன்
வளர்த்தேனே காளியற்கு சிவனே பறமசிவனே

அர்ச்சுனன் விருத்தம்.

அபனிட விதியோ முன்பு யான்செய் திவினையோ முன்னாள்
வயமுள்ள நாககன்னிவருந்திய தவந்தன்னாலோ
ஜெய முடன் வுன்னை நாககன் திருமுடி சூட்டிக் கண்ணால்
நலமுடன்பார்ப்பதற்கில்லா நான் பாவியானேடா

புலம்பல் தரு [illegible]வி.

ஆ மகனே அப்போ மகனே

அனுபல்லவி

ஆ மகனே நீயும் அமரர்வாள் யிடந்தனில்
அருமையானதோர் அஸ்த்திர வித்தை கற்றாயே பாலா மகனே (ஆ)

சரணம்.

யெண்டிசையும் ஜெயிற்று யென்முன் நீ வந்தாயோ மகனே
(வுன்) யெழில்வீறபராக்கிறமம்யெங்கேயொளித்தாயே மகனே (ஆ)
யெத்தனை நூல் கனெல்லாம் யெடுத்தெடுத்துச்சொன்னாயே மகனே
(நீ) வைத்திருக்கும் கணையால் வதைக்கிறேனென்றாயே மகனே (ஆ
ஐய்வர்க்கு துணையென்று அவனியில் இருந்தாயே மகனே
(நீ)கற்றுணர்ந்த தனுர்வித்தைதகைமோசம்செய்ததடாமகனே (ஆ
பெற்ற வயறெனக்கு பத்தியெரியுதடா மகனே
(வுன்னை) பெற்றதாயாரை பார்த்து இரங்க தம்பியழ மகனே
யென்னமாய் பறந்தாயோ யேதென்று அழுதாயோ மகனே (ஆ)
(அப்போ) யென்னவுன் சிந்தையில்யெண்ணிபிறந்தாயோமகனே ஆ

பீமன் விருத்தம்.

இடியது கேட்ட நாகம் யிடமிந்தது போல் பீமன்
துடிதுடித்தலரி வீழ்ந்து சொலலுவான் மகனைப்பார்த்து
கடுகமிழ் மார்பா வுன்னை காளிகாதேவியர்க்கு
வடிவுடன் பெலி கொடுத்து மண்மீதில் இருப்பேனேடா

புலம்பல் கன்னிகள்.

சங்கறன் செய் கொடுமையிதானோ பொல்லா
சண்டாளர் கண்முன் நீ சதிசெய்பலாமோ அடா

சதிசெய்யலாமோ சச்கரன் செய்
அங்க முருதேபாலாவும் ஆண்மைதனை நினைத்தால்
அருமோ சிலா அடா அருமோ சிலா சங்கரன் செய்
இந்திருதி தேவர்கள் மூவர் இ... ருக்ஷசவீரர்
அடா ருக்ஷச வீரர் சங்க...
வுன்னைக்கண்டால் நடுங்...ட நீ காதின்
யிருப்பா யென்று களித்திருந்தேண்டா அடா
களித்திருந்தேண்டா சங்கரன்
பெண்ணினான் மிருந்தேண்... சிலா அந்த
பெண்ணதை யெல்லாம் யீடழித்தாய் நீ கோலா
யீடழித்தாய் நீ கோலா சங்கரன்
மாபாவி ஆரியன் செய்குதோ அந்த
வகைபரி... மலே உறந்தந்நாய் யிதோ அடா
வறந்தந்நாய் யிதோ சங்கரன்
பாரத யுத்தம் முடித்து இந்த பட்டணம் வருவதற்கு
பரிவட்டம்தரித்து அடா
பரிவட்டம் தரித்து சங்கரன்
...ாபிஷேகம் நீ பெற்று இந்த
பாருலகெல்லாம் பண்புடன் னியாளாமல்
பண்புடன் னியாளாமல் சங்கரன்
வீ...யா காளி பற்முன்பு வெட்ட விதித்தானே
பிறம்மனும் வேந்தனே யின்று அடா
வேந்தனே யின்று சங்கரன்
மாபாவி யானேண்டா பாலா இந்த
மண்ணிலுள்ளோர் ஜனம் வசை சொல்ல
சிலா அடேவசை சொல்லசிலா சங்கரன்

தருமர் விருத்தம்.

மன்ன மன்னவர்கள் சூழ மறையவர் அருகிருக்க
கண்ணால் சேற அத்தினூடு களமுடன் ஆள்வாயென்று
நன்னயத்துடன் னியாள்வாயென்று நான் மனம் மகிழ்திருந்தேன்
பென்னமாய் பெலி கொடுத்து யிருப்பேனோ மகனே யென்றான்

தருமர் புலம்பல் தரு கண்ணிகள்.

செந்திருவை யொற்ற மார்பா நீ தேச மாள்வாயென்றிருந்தேன்
பைந்தமிழ் சேற் துரியனாலே பாவியாலே மாளுனாயோ
விந்தையுடன் வீ பிரந்து மேதினி யாள்வா யென்றிருந்தேன்
சேனை மன்னர் புடை சூழ தேர் மீதினில் பவனி வந்து
வாண புகழும் மணி மகுடம்சூடி வைக்க னான் மன மகிழ்ந்து
மாண் மருவு குல மேந்தும் மபேல பறனார் தன் செயலோ
ஆன கடோற்க் கஜனுக்கு நீ ஆந்துணை யென்றிருந்தேன்
அப்ப அபி மன்னனுக்கும் நீ துணை யிருப்பா யென்றிருந்தேன்
வைப்பவனும் தரிக்கி முன்னே வேளையில்லா வேளை தன்னில்
மெய்யுறுகும் காளியர்க்கு வளர்த்தேண்டா கண்மணியே
விழிகள் நெறுப் பெரிய வீற முடி தரையில் வீழ
தரையில் வீழ ஆபறணம் தானழுதார் தர்மருந்தான்

இரண்டாம் பாகம் முற்றிற்று மூன்றாம் பாகம் பின்னால் வரும்

சென்னை கோமளீஸ்வரன் கோவில் அத்தோரத் தெருவு 43வது நெம்பர்.
பொ. குமரகுரு முதலியார் அவர்களது ஜகத்பிரகாச அச்சுக்கூடம்.